# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **STC. No.314/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | பாரதிராஜன் |
| Father's /Husband Name | : | பொன்னையன் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 40 |
| Occupation | : | தலைமைக் காவலர், குடவாசல் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of February 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் குடவாசல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.05.2024 ஆம் தேதி மதியம் 01.00 மணிக்கு நானும் காவலர் 1471 சக்திவேல் என்பவரும் ஆய்வாளருடன் ரோந்து அலுவலாக வேம்பனூர் பகுதியில் கண்காணித்து வந்த போது வேம்பனூர் ஐய்யனார் கோவில் அருகே TN68AE8425 KTM என்ற பைக்கை ஓட்டி கொண்டு வந்த நபர் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் நடுரோட்டில் இருசக்கர வாகனத்தில் Bike wheeling செய்து கொண்டு இருந்தவரை பிடித்து விசாரணை செய்த போது அவர் கும்பகோணம் தாலுக்கா திருச்சேறை மேட்டிருப்பு திருசங்கு மகன் அஜய்ராஜ் என்பவரை 13.15 மணிக்கு அவர் பொது மக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அதிவேகமாக இருசக்கரவாகனத்தை ஓட்டியதின் காரணம் கூறி கைது செய்து சம்பவம் இடத்திலேயே ஆய்வாளர் அவர் ஓட்டி வந்த TN 68 AE 8425 KTM இரு சக்கர வாகனத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அவர் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும் காவலர் சக்திவேலும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பின்பு எதிரியையும் கைப்பற்ற பட்ட இருசக்கர வாகனத்தையும் 14.00 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்த எதிரி மீது ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு

நாங்கள் உதவியாக இருந்தோம். சம்பவம் குறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று பணியில் இருந்ததைத காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட வில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் வாகன சோதனைக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து வாகனத்தை கைப்பற்றவில்லை என்றாலும் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லபடும் இடம் பொது மக்கள் கூட்டமாக உள்ள இடம் என்றால் சரிதான். எதிரியின் செயலால் யாராக பாதிக்கப்பட்டதாகவோ அச்சுறத்தப்பட்டதாகவோ பொது மக்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுல் மகசரை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எந்த சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் புள்ளி விபரத்திற்காக ஆய்வாளரால் போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.07 16:00:27 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`